# ருஸூமுல் அவ்கா∴ப் - நிறுத்தக் குறியீடுகள்

வரத்தலில் குர்ஆன் தர்த்தீலா. அல்-குர்ஆன் 73-4 குர்ஆனைத் தெளிவாக நிறுத்தி நிறுத்தி ஓதுவீராக!

குர்ஆனை நிறுத்தி நிறுத்தி ஓதுவதற்கு நிறுத்தக் குறியீடுகள் எவை எவை என்பதை தெரிந்திருத்தல் அவசியம். எந்த ஒரு காரியத்தையும் அதனுடைய முறைப்படி செய்வது சாலச்சிறந்ததாகும். குர்ஆனை நல்லமுறையில் ஓத வேண்டுமானால் ஓதும் முறைகளைத் தெரிந்து ஓதுதல் அவசியம். எந்த இடத்தில் நிறுத்தி ஓதுவது, எந்த இடத்தில் சேர்த்து ஓதுவது என்பன போன்ற விதிமுறைகளை விதியில் நினைத்து குர்ஆனை ஓதுவதுதான் சிறப்பான, நன்மையான செயலாகும்.

குர்ஆனின் கருத்துக்களில் சிதைவு ஏற்படாமல் அழகிய நயத்தோடு வார்த்தைகளை நிறுத்தியும், சேர்த்தும் சீரிய முறையில் ஓதுவதற்கு ஏதுவாக சில குறியீடுகள் ஏற்படுத்தப்பட்டுள்ளது. இந்த நிறுத்தக் குறியீடுகளுக்கு **“ருஸூமுல் அவ்கா∴ப்“** என்று கூறுப்படும்.

## நிறுத்தியும் சேர்த்தும் ஓதுவதற்கான குறியீடுகள் 19.

1. **O** இந்தக் குறியீடு ஒரு வசனம் முடிவதைக் குறிக்கும் ஓர் அடையாளமாகும். எந்த வசனம் முடிவுற்றது என்பதை அந்த வட்டத்திற்குள் எண்ணால் எழுதப்பட்டிருக்கும். சில இடங்களில் இந்த குறியீட்டின் மீது நிறுத்தி ஓதும் குறியீடுகளும், சேர்த்து ஓதும் குறியீடுகளும் இடப்பட்டிருக்கும். **O** இந்த குறியீட்டின் மீது நிறுத்தும் குறியீடுகள் வந்தாலும், அல்லது வராவிட்டாலும் நிறுத்தி ஓத வேண்டும். வசனம் என்பதற்கு அரபியில் ஆயத்து என்று கூறுவர். இந்த வசனம் குர்ஆனில் அன்னை ஆயிஷா நாயகி ரலியல்லாஹு தஆலா அன்ஹா அவர்களின் அபிப்பிராயப்படி 6666.

2. ۵ இந்தக் குறியீடும் ஒரு வசனம் முடிவதைக் குறிக்கும் ஓர் அடையாளமாகும். இதற்கு வசன எண் கொடுக்கப்படவில்லை. இந்தக் குறியீட்டை “கூ∴பா அறிஞர்களைத் தவிர மற்றவர்கள் ஓர் வசனத்தின் அடையாளமாக கணக்கிடுவார்கள்“ - ஆதாரம்: தர்ஜமதுல் குர்ஆன் பி அல்த∴பில் பயான்.

3. இந்தக் குறியீட்டின் மீதும் நிறுத்தும் குறியீடுகள் வந்தாலும் அல்லது வராவிட்டாலும் நிறுத்தி ஓத வேண்டும். இக்குறியீடு அதிகபட்சமாக சூரத்துத் தாஹாவில் பன்னிரண்டு இடங்களில் வருகின்றது.

4. م இந்த குறியீட்டிற்கு “வக்∴ப் லாஸிம்“ என்று சொல்லப்படும். இதன் பொருள் “அவசியம் நிறுத்த வேண்டும்“ என்பதாகும். ஆகையால் இக்குறியீடு வரும் இடத்தில் அவசியம் நிறுத்தி ஓத வேண்டும். இல்லையெனில் அர்த்தம் வித்தியாசப்படக் கூடும். இக்குறியீடு அதிகபட்சமாக சூரத்துல் பகறாவில் எட்டு இடங்களில் வருகிறது.

www.sufimanzil.org

5. ط இந்த குறியீட்டிற்கு “முத்லக்“ என்று சொல்லப்படும். இந்தக் குறியீடு வரும் இடத்தில் நிறுத்தி ஓதுவதே சிறந்தது. சேர்த்து ஓதுவதில் சிறப்பில்லை.

6. ج இந்தக் குறியீட்டிற்கு “ஜாயிஸ்“ என்று சொல்லப்படும். இந்தக் குறியீடு வரும் இடத்தில் நிறுத்தியும் ஓதலாம். அல்லது நிறுத்தாமலும் ஓதலாம். இருப்பினும் நிறுத்தி ஓதுவதே சிறந்தது.

7. ز இந்தக் குறியீடு வரும் இடத்தில் நிறுத்தி ஓதுவதும் சேர்த்து ஓதுவதும் அனுமதிக்கப்பட்டதாக இருந்தாலும் சேர்த்து ஓதுவதுதான் சிறந்தது.

8. ص இந்தக் குறியீடு வரும் இடத்தில் சேர்த்து ஓதலாம். இருப்பினும் சிறுத்தி ஓதுவதற்கும் அனுமதி உள்ளது.

9. ق இந்தக் குறியீடு வரும் இடத்தில் சேர்த்து ஓதுவது சிறந்தது. இது பெரும்பான்மையினரின் கருத்து.

10. لا இந்தக் குறியீடு வரும் இடத்தில் நிறுத்தி ஓதுவதற்கு அனுமதியில்லை. ஒருவேளை நிறுத்தி ஓத வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டால், முந்திய தொடரை மீண்டும் சேர்த்து ஓத வேண்டும்.

11. قف இந்தக் குறியீடு வரும் இடத்தில் நிறுத்தி ஓதுவதற்கு அனுமதி உண்டு. இது அதிகபட்சமாக சூறத்துல் பகறா, சூறத்து ஆல இம்ரான் ஆகிய அத்தியாயங்களில் தலா பன்னிரண்டு இடங்களில் வருகின்றது.

12. وقفة இந்தக் குறியீடு வரு.ம் இடத்தில் நிறுத்தி ஓதுவது சிறப்பிற்குரியது. இது அதிகபட்சமாக சூறத்துல் பகறா, சூரத்து ஙாஷியா ஆகிய அத்தியாயங்களில் தலா நான்கு இடங்களில் வருகின்றது.

13. سكتة இந்தக் குறியீடு வரும் இடத்தில் மூச்சை நிறுத்தாது சப்தத்தை மட்டும் சற்று நிறுத்தி ஓத வேண்டும். இது ஏழு அத்தியாயங்களில் ஏழு இடங்களில் வருகின்றது.

14. ك இந்தக் குறியீட்டிற்கு முன்னால் எந்தக் குறியீடு உள்ளதோ அதையே பின்பற்றி ஓத வேண்டும்.

www.sufimanzil.org

15. ص இக்குறியீடு வரும் இடத்தில் நிறுத்துவது அழகுடையதாகவும், விரும்பத்தகக்கதாகவும் உள்ளது.

16. صلى இக்குறியீடு வரும் இடத்தில் சேர்த்து ஓதுவது அழகுடையதாகவும் விரும்பத்தக்கதாகவும் உள்ளது.

17. وقف النبي صلى الله عليه وسلم இந்த அடையாளத்திலும் நிறுத்தி ஓத வேண்டும். இது குர்ஆனில் பதினாறு இடங்களில் வருகின்றது. அதிகபட்சமாக சூரத்து யூனுஸில் மூன்று இடங்களில் வருகின்றது.

18. وقف جبريل இந்த அடையாத்திலும் நிறுத்தி ஓத வேண்டும். இது குர்ஆனில் சூரத்து ஆல இம்ரானில் ஒரு இடத்தில் மட்டுமே வருகின்றது. வசனம் 94.

19. وقف منزل இந்த அடையாளத்திலும் நிறுத்தி ஓத வேண்டும். இது குர்ஆனில் பத்து இடங்களில் வருகின்றது. அதிகபட்சமாக சூரத்துல் பகறா மற்றும் சூரத்துல் அன்ஆம் ஆகிய அத்தியாயங்களில் தலா இரண்டு இடங்களில் வருகின்றது.

20. وقف غفران இந்த இடத்தில் நிறுத்துவது மன்னிக்கப்படக் கூடியதாக இருக்கின்றது. இது குர்ஆனில் ஒன்பது இடங்களில் வருகின்றது. அதிகபட்சமாக சூரத்து யாஸீனில் நான்கு இடங்களில் வருகின்றது.

**வசனங்கள்**

குர்ஆனில் மொத்தம் எத்தனை வசனங்கள் என்றால், 6666 வசனங்கள் என்று நாம் உடனே சொல்லி விடுவோம். காரணம் அது அன்னை ஆயிஷா நாயகி ரலியல்லாஹு தஆலா அன்ஹா அவர்களின் அபிப்பிராயமாக இருக்கின்றது. அன்னை ஆயிஷா ரலியல்லாஹு தஆலா அன்ஹா அறிவித்திருப்பது உண்மைதான். ஆனால் நாம் ஓதக்கூடிய குர்ஆனில்6236 வசனங்கள்தான் இருக்கின்றது. வசனங்களின் எண்ணிக்கை 6666 ல் 430 வசனங்கள் குறைவாக உள்ளது. இன்னும் சிலரின் அபிப்பிராயப்படி வசனங்களின் எண்ணிக்கையில் கூடுதல் குறைவு உள்ளது.

**அபிப்பிராயம்**

| | | | |
|---|---|---|---|
| 1. | ஆயிஷா நாயகி | அபிப்பிராயம் | 6666 வசனங்கள் |
| 2. | ஷாம் வாசிகள் | அபிப்பிராயம் | 6250 வசனங்கள் |
| 3. | கூஃபா வாசிகள் | அபிப்பிராயம் | 6236 வசனங்கள் |
| 4. | இப்னு மஸ்ஊத் | அபிப்பிராயம் | 6218 வசனங்கள் |
| 5. | பஸரா வாசிகள் | அபிப்பிராயம் | 6216 வசனங்கள் |

www.sulimanzil.org

6. இஸ்மாயீல் இப்னு ஜஃபார மதனீ அபிப்பிராயம் 6214 வசனங்கள்

7. இராக் வாசிகள் அபிப்பிராயம் 6214 வசனங்கள்

8. மக்கா வாசிகள் அபிப்பிராயம் 6212 வசனங்கள்

ஆதாரம்: தர்ஜமதுல் குர்ஆன் பி அல்தபில் பயான்

வசனங்களின் எண்ணிக்கையை கணக்கிடுவதில் வித்தியாசங்கள் இருந்தாலும், குர்ஆனிலுள்ள வார்த்தைகளிலோ அல்லது எழுத்துக்களிலோ எந்த வித்தியாசமும் யாரிடமும் கிடையாது. நமது நாட்டில் அச்சிடப்பட்டு வெளியிடக்கூடிய குர்ஆனில், கூஃபாவாசிகளின் அபிப்பிராயமாகிய 6236 வசனங்கள் உள்ளது. சில இடங்களிலுள்ள ஒரு வசனத்தை இருவசனங்களாகவும், சில இடங்களில் இருவசனங்களை ஒரு வசனமாகவும் கணக்கிடுவதால் நிறுத்தும் எண்ணிக்கையில் கூடுதல் குறைவு ஏற்படுகின்றது. ஆயிஷா நாயகி ரலியல்லாஹு தஆலா அன்ஹா அவர்களின் அபிப்பிராயம் உண்மை. அந்த உண்மையை நாம் இப்போது காண்போம்.

**வசனம் - நிறுத்தல் குறியீடு**

அன்னை ஆயிஷா நாயகியின் 6666 வசனத்திற்கான ஆதாரங்களை பார்ப்போம். பொதுவாக ஆயத்து என்பது ஒரு நிறுத்தல் குறியீடுதான். குர்ஆனில் 6236 வசனங்கள் மட்டுமல்லாமல் மேலும் சில நிறுத்தல் குறியீடுகளும் உள்ளது. அவைகளை இந்த 6236 எண்ணிக்கையுடன் சேர்த்து கணக்கிட்டுப் பார்ப்போம்.

٥ இந்தக் குறியீடு "கூஃபா அறிஞர்களைத் தவிர மற்றவர்களிடம் இந்த அடையாளம் ஒரு வசனத்திற்கும் மற்றொ வசனத்திற்கும் இடையில் உள்ள முற்றுப் புள்ளியாகும். இந்தக் குறியீட்டிற்கு மேல் எவ்வித அடையாளமும் இல்லாதிருப்பின் நிறுத்தி ஓத வேண்டும்.

ஆதாரம்: தர்ஜமதுல் குர்ஆன் பி அல்தஃபில் பயான்

மேலே உள்ள ٥ இந்த குறியீடு ஒரு வசனத்திற்கு சமமான ஒன்றாக உள்ளது. ஆகையால் இந்த குறியீட்டின் எண்ணிக்கையையும் 6236 உடன் சேர்த்துக் கொள்வோம். இக்குறியீடு ஐம்பத்தி இரண்டு அத்தியாயங்களில் நூற்றிப் பதினாறு இடங்களில் வருகின்றது.

م 'மீம்' இந்தக் குறியீடு "வக்ஃப் லாஸிம்" என்று சொல்லப்படும். வக்ஃப் லாஸிம் என்றால் கண்டிப்பாக நிறுத்தி ஓத வேண்டும் என்ற பொருளைத் தருகிறது. ஆகையால் இந்தக் குறியீட்டையும் நாம் எண்ணிக்கையில் சேர்த்துக் கொள்வோம். இக்குறியீடு நாற்பது அத்தியாயங்களில் எண்பத்தி எட்டு இடங்களில் வருகின்றது.

www.sufimanzil.org

'வக்ஃபா' இதுவும் ஒரு நிறுத்தல் குறியீடுதான். இதில் நிறத்தி ஓதுவது சிறப்பிற்குரியது. ஆகையால் இந்தக் குறியீட்டையும் நாம் எண்ணிக்கையில் சேர்த்துக் கொள்வோம். இக்குறியீடு பன்னிரண்டு அத்தியாயங்களில் இருபத்தி இரண்டு இடங்களில் வருகிறது.

'கிஃப்ஃ' இதுவும் ஒரு நிறுத்தக் குறியீடுதான். இந்த இடத்தில் நிறுத்தி ஓதுவதற்கு அனுமதி உண்டு. ஆகையால் இந்தக் குறியீட்டையும் நாம் எண்ணிக்கையில் சேர்த்துக் கொள்வோம். நாற்பத்தி நான்கு அத்தியாயங்களில் நூற்றி இருபத்தி ஒன்பது இடங்களில் வருகின்றது.

'வக்ஃபுன் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்.' இதுவும் ஒரு நிறுத்தும் இடம்தான். ஆகையால் இதையும் நாம் எண்ணிக்கையில் சேர்த்துக் கொள்வோம். இது 12 அத்தியாயங்களில் பதினாறு இடங்களில் வருகின்றது.

'வக்ஃப் ஜிப்ரீல்.' இதுவும் ஒரு நிறுத்தும் இடம்தான். ஆகையால் இதையும் நாம் எண்ணிக்கையில் சேர்த்துக் கொள்வோம். இது ஒரு இடத்தில் வருகின்றது.

'வக்ஃப் மன்ஜில்'. இதுவும் ஒரு நிறுத்தும் இடம்தான். ஆகையால் இதையும் நாம் எண்ணிக்கையில் சேர்த்துக் கொள்வோம். இது எட்டு அத்தியாயங்களில் பத்து இடங்களில் வருகின்றது.

'வக்ஃப் ஃகுஃப்ரான்'. இங்கு நிறுத்துவது மன்னிக்கப்படக் கூடியதாக இருக்கின்றது. ஒருவேளை இங்கு நிறுத்தக் கூடிய சூழ்நிலை ஏற்பட்டால் நிறுத்தி ஓதுவது மன்னிக்கப்படக் கூடியதாக இருக்கின்றது. இது ஐந்து அத்தியாயங்களில் ஒன்பது இடங்களில் வருகிறது.

இப்போது நாம் நிறுத்தக் குறியீடுகளைக் கணக்கிட்டுப் பார்ப்போம்.

| | | |
|---|---|---|
| 1. | குர்ஆனிலுள்ள வசனங்கள் எண்ணிக்கை | 6236 |
| 2. | பிஸ்மில்லா ஹிர்ரஹ்மானிர் ரஹீம் எண்ணிக்கை | 113 |
| 3. | இந்தக் குறியீடு எண்ணிக்கை | 116 |
| 4. | வக்ஃப் லாஸிம் எண்ணிக்கை | 88 |
| 5. | வக்ஃபுன் நபி எண்ணிக்கை | 16 |
| 6. | வக்ஃப் ஜிப்ரீல் எண்ணிக்கை | 1 |
| 7. | கிஃப் எண்ணிக்கை | 129 |
| 8. | வக்ஃபா எண்ணிக்கை | 22 |
| 9. | வக்ஃப் மன்ஸில் எண்ணிக்கை | 10 |
| 10. | வக்ஃப் ஃகுஃப்ரான் எண்ணிக்கை | 9 |
| | மொத்தம் | 6740 |

www.sufimanzil.org

இவைகளை எல்லாம் கூட்டினால் 6666 விட 74 எண்ணிக்கை கூடுதலாக வருகின்றது. அப்படியானால் ஆயிஷா நாயகி அவர்களின் அபிப்பிராயமாகிய 6666 வசனங்களை எப்படி கணக்கிடுவது?

**கணக்கிடும் முறை:**

நிறுத்தக் குறியீடுகளின் எண்ணிக்கையில் சிலவற்றை தகுந்த காரணங்களைக் கொண்டு குறைக்க வேண்டும். எந்தெந்த நிறுத்தக் குறியீடுகளை எதற்காகக் குறைக்க வேண்டும் என்பதைப் பார்ப்போம்.

6236 வசனங்கள். இதில் நாம் எதையும் குறைக்கவில்லை. 113 பிஸ்மில்லா ஹிர்ரஹ்மா னிர்ரஹீம். இதிலும் நாம் எதையும் குறைக்கவில்லை. 116 எண்ணிக்கை கொண்ட இந்த குறியீடு. இதிலும் நாம் எதையும் குறைக்கவில்லை.

'வக்ஃப் லாஸிம்'. நாற்பது அத்தியாயங்களில் 88 இடங்களில் வரக்கூடிய இந்த நிறுத்தக் குறியீடு, 34 இடங்களில் வசனத்தின் முடிவில் வந்துள்ளது. வசனத்தை ஏற்கனவே நாம் கணக்கில் சேர்த்திருப்பதால், வசனம் முடிவில் வந்திருக்கக் கூடிய வக்ஃப் லாஸிமை கணக்கில் சேர்க்காமல் கழித்து விடுவோம்.

| | |
|---|---|
| வக்ஃப் லாஸிம் மொத்த இடங்கள் | 88 |
| வசனத்தின் முடிவில் வந்திருக்கக் கூடியது | 34 |
| கணக்கில் சேர்க்க வேண்டியது | 54 மட்டுமே |

'வக்ஃபுன் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்'. 12 அத்தியாயங்களில் 16 இடங்களில் வரக்கூடிய இந்த நிறுத்தக் குறியீடு, 3 இடங்களில் வசனத்தில் இறுதியில் வந்துள்ளது. வசனத்தை நாம் ஏற்கனவே கணக்கில் சேர்த்திருப்பதால் வசனம் முடிவில் வந்திருக்கக் கூடிய வக்ஃபுன் நபியை கணக்கில் சேர்க்காமல் கழித்து விடுவோம்.

| | |
|---|---|
| வக்ஃபுன் நபி மொத்த இடங்கள் | 16 |
| வசனத்தின் முடிவில் வந்திருக்கக் கூடியது | 3 |
| கணக்கில் சேர்க்க வேண்டியது | 13 மட்டுமே |

'வக்ஃப் ஜிப்ரீல்': ஒரே ஒரு இடத்தில் வரக்கூடிய வக்ஃப் ஜிப்ரீல் வசனத்தின் இறுதியில் வந்துள்ளது. வசனத்தை நாம் ஏற்கனவே கணக்கில் சேர்த்திருப்பதால் வசனம் முடிவில் வந்திருக்கக் கூடிய வக்ஃப் ஜிப்ரயீலை கணக்கில் சேர்க்காமல் கழித்து விடுவோம்.

'கிஃப்'. நாற்பத்தி நானகு அத்தியாயங்களில் 129 இடங்களில் வரக்கூடிய இந்தக் குறியீடு, ஐந்து இடங்களில் வசனத்தின் இறுதியிலும், மூன்று இடங்களில் ه இந்தக் குறியீட்டோடும், ஒரு இடத்தில் வக்ஃபுன் நபியோடும் வந்துள்ளது. வசனங்களையும் வந்து இந்த குறியீட்டையும், வக்ஃபுன் நபியையும் ஏற்கனவே நாம் கணக்கில் சேர்த்திருப்பதால் இவைகளையும் கணக்கில் சேர்க்காமல் கழித்து விடுவோம்.

www.sufimanzil.org

| | |
|---|---|
| கி:ப் மொத்த இடங்கள் | 129 |
| வசனத்தில் இறுதியில் வந்திருக்கக் கூடியது | 5 |
| இந்தக் குறியீட்டோடு வந்திருக்கக் கூடியது | 3 |
| வக்:புன் நபியோடு வந்திருக்கக் கூடியது | 1 |
| கணக்கில் சேர்க்க வேண்டியது | 120 மட்டுமே. |

'வக்:பா.' 12 அத்தியாயங்களில் இருபத்தி நான்கு இடங்களில் வரக்கூடிய இந்தக் குறியீடு, ஆறு இடங்களில் வசனத்தின் முடிவிலும் இரண்டு இடங்களில் கி:ப் உடனும் வந்துள்ளது. வசனத்தையும் மற்றும் கி:ப்பையும் ஏற்கனவே நாம் கணக்கில் சேர்த்திருப்பதால் இவைகளையும் கணக்கில் சேர்க்காமல் கழித்து விடுவோம்.

| | |
|---|---|
| வக்:பா மொத்த இடங்கள் | 22 |
| வசனம் இறுதியில் வருபவை | 6 |
| கி:ப் உடன் சேர்ந்து வருபவை | 2 |
| கணக்கில் சேர்க்க வேண்டியவை | 14 மட்டுமே. |

'வக்:ப் மன்ஸில்'. எட்டு அத்தியாயங்களில் பத்து இடங்களில் வரக்கூடிய இந்தக் குறியீடு, மூன்று இடங்களில் வசனத்தின் இறுதியிலும் ஆறு இடங்களில் வக்:ப் லாஸிமோடும், ஒரு இடத்தில் கி:ப் உடனும் வந்துள்ளது. வசனத்தையம், வக்:ப் லாஸிமையும், கி:ப்பையும் ஏற்கனவே நாம் கணக்கில் சேர்த்திருப்பதால் இவைகளையும் கணக்கில் சேர்க்காமல் கழித்து விடுவோம்.

| | |
|---|---|
| வக்:ப் மன்ஸில் மொத்த இடங்கள் | 10 |
| வசனத்தின் இறுதியில் வருபவை | 3 |
| வக்:ப் லாஸிமுடன் சேர்ந்து வருபவை | 6 |
| கி:ப் உடன் சேர்ந்து வருபவை | 1 |

வக்:ப் மன்ஸிலில் எதையும் கணக்கில் சேர்க்க முடியாது.

'வக்:ப் :கு:ப்றான்'. ஐந்து அத்தியாயங்களில் ஒன்பது இடங்களில் வரக்கூடிய வக்:ப் :கு:ப்ரான் ஒரு இடத்தில் வசனத்தின் இறுதியிலும் மூன்று இடங்களில் வக்:ப் லாஸிமோடும் வந்துள்ளது. வசனத்தையும், வக்:ப் லாஸிமையும் ஏற்கனவே நாம் கணக்கில் சேர்த்திருப்பதால் இவைகளையும் கணக்கில் சேர்க்காமல் கழித்த விடுவோம்.

| | |
|---|---|
| வக்:ப் குப்ரான் மொத்த இடங்கள் | 9 |
| வசனத்தின் இறுதியில் வருபவை | 1 |
| வக்:ப் லாஸிமுடன் சேர்ந்து வருபவை | 3 |
| கணக்கில் சேர்க்க வேண்டியவை | 5 |

'வக்:ப் கு:ப்ரான்': இந்த இடத்தில் நிறுத்துவது மன்னிப்பட்டக் கூடியதாக இருக்கிறது. ஒரு ஊரில் இருந்து மற்றொரு ஊருக்கு பிரயாணம் செய்கிறோம் என்று வைத்துக் கொள்வோம். நாம் இறங்கும் ஊரில் வாகன நிறுத்தம் கிடையாது. வாகன நடத்துனர் நமக்காக வாகனத்தை நிறுத்துகிறார். இது மன்னிக்கப்படக் கூடிய நிறுத்தம். இதைப் போன்று வக்:ப்

www.sufimanzil.org

குஃப்ரான். இவ்விடத்தில் நிறுத்துவது மன்னிக்கப்படக் கூடியதாக இருக்கின்றது. நிறுத்தாமலும் ஓதலாம். ஆகையால் வக்ஃப் ஃகுப்ரானில் நாம் கணக்கில் சேர்க்க வேண்டிய ஐந்தையும் கழித்து விடுவோம். இப்போது நாம் எண்ணிக்கையின் கூட்டுத் தொகையைப் பார்ப்போம்.

| | | |
|---|---|---|
| 1. | குர்ஆனிலுள்ள வசனங்கள் எண்ணிக்கை | 6236 |
| 2 | .பிஸ்மில்லா ஹிர்ரஹ்மானிர் ரஹீம் | 113 |
| 3. | ۝ இந்தக் குறியீடு | 116 |
| 4. | வக்ஃப் லாஸிம் | 54 |
| 5. | வக்ஃபுன் நபி | 13 |
| 6. | வக்ஃப் ஜிப்ரயீல் | 0 |
| 7 | .கிஃப் | 120 |
| 8. | வக்ஃபா | 14 |
| 9. | வக்ஃப் மன்ஸில் | 0 |
| 10. | வக்ஃப் ஃகுஃப்ரான் | 0 |
| | மொத்தம் | 6666 |

*அல்லாஹ் மிக அறிந்தவன்.*

www.sufimanzil.org